# அனுசூயைசரித்திரக் கும்மியும்,
# கோரக்கும்பார்சரித்திரக் கும்மியும்
## இராமநாதபுரம் பத்மாஸனி அம்மாள் இயற்றியது

**anucUyai carittirakkummi, kOrakumpar carittirakkummi**

**by irAmanAtapuram patmAcani ammAL**

**In tamil script, unicode/utf-8 format**


**Acknowledgements:**

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.



**© Project Madurai, 1998-2021.**

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of Tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

# அனுசூயைசரித்திரக் கும்மியும், கோரக்கும்பார்சரித்திரக் கும்மியும்
## இராமநாதபுரம் பத்மாஸனி அம்மாள் இயற்றியது

**Source:**

அனுசூயைசரித்திரக் கும்மியும், கோரக்கும்பார்சரித்திரக் கும்மியும்
இராமநாதபுரம் பத்மாஸனி அம்மாள் இயற்றியது.
இலட்சுமி விலாசம் பிரஸ். இராமநாதபுரம்.
1916

-----------------

## அனுசூயை சரித்திரம்.

ஸ்ரீமதேராமானுஜாயநம:
விருத்தம்

மங்கையர்க்குள் உயர்வு பெற்ற மாது அனுசூயாதேவி
சங்கையற்றபதிவிர்தா தர்மத்தின் மகிமைகூற
செங்கெருடன் மீதிலேறி சீக்கிரம் மதுரைவந்த
மங்களமாய் கூடல்நாதன் பங்கயத்தாள் பணிகின்றேனே

**(1வது கட்டம் ) தேவசபைச்சிறப்பு**

நவராத்திரி கும்மி மெட்டு

(பல்லவி)

தேவசபைதனில் சிங்காரவிந்தையை செப்புதற்காமோ பெண்மயிலே

(அனுபல்லவி)

ஆவலுடன் தேவ சாஜன் கொலுவில் அமைந்தார் நவரத்ன பீடத்தில்
பாவலரும்காவலரும் பூமலர்கள் போடவே பக்தர்களும் சித்தர்களும்
முக்தர்களும் பாடவே (தேவசபை)

சரணம்.

தேனார் பொழிகின்ற சோலைகளாம் அதில்
நானாவித சித்த வேலைகளாம் 1

வானோர்புகழ் யெக்ஞசாலைகளாம் சாஜ
மன்னர் அணியும் பூமாலைகளாம் 2

நேராகமயூரம் நின்று ஆடக்குயில் பாட நின்று
மன்னர்கப்பங்கள் கொண்டு பணிந்து ஏத்திட (தேவசபை) 3

முப்பத்து முக்கோடி தேவர்கள் கூடவே
அற்புதமாய் மலர்போடவே 4

பொற்கொடியாள் நின்று சாமரம்போடவே
அப்ஸாஸ்திரீகள் நடனங்கள் ஆடவே 5

சிறம் ஆட்டிய சுரம்கூட்டியே கரம் ஆட்டியே தாளம்போட
விரைவாககுருவானவர் எதிரேநின்று ஆசீர்கூற (தேவசபை)
----------

**2 வது கட்டம்.**

வந்தனம் தந்தோம் என்றமெட்டு

பல்லவி
ராஜனுமகிழ்ந்து ஒருவாசகம் உசைத்தார்
மாசம் மூன்றுமாரியாக பூவுலகில் பெய்வதும் .

ஆலையங்கள் தோறும் பூஜை அன்புடனே செய்வதும் (ராஜனும்)

தீதில்லாமல் தென்னல் விளைந்து தான தர்மம் செய்வதும்
மாதர்கள் பதித்ஜைசெய்து நீதியாக உய்வதும் (ராஜனும் 3)

பக்தர்கள் வேதங்கள் ஓதி நித்யமும் கோஷிப்பதும்

இத்தனைக்கும்காரணம் எடுத்துமே உரைத்திடீர் (ராஜனும்)

----

**3 வது கட்டம்**

ரா.ரா. நலுங்கிட என்றமெட்டு

தண்டகாரண்யம் தன்னில் அத்திரி முனிசென்று தவமிருந்தார்
எண்ட பாரி அனுசூயை செய்தவிருதத்தால் மண்டலம்
கழிப்பதெல்லாம கேளும் ராஜமன்னா
எந்தாளின் பதமலர் நித்யம்விடாமலே சிரத்தையாய் பூசைசெய்வள் 1

சத்துவகுணமுள்ள உத்தமி விருதத்தாலே
இத்தலம் செழிப்பதெல்லாம் (கேளும்) 2

மாசமும்மாரிபெய்வதும் தாஸர்கள் உய்வதும் அவளாலே
பூவுலகங்களும் வானுலகங்களும் புகழ்வதும் அவளாலே (கேளும் ராஜமன்னா.)

-----------

**4வது கட்டம்.**

சோலையிலேகிளிகள்

பல்லவி
வீணை தன்னை மீட்டீ கானசுறம்பாடி நாரதர் ஓடிவந்தார்
இங்கையென்ன கூட்டம் யெங்கும் வேதகோஷ்டம்
யென்ன மனவாட்டமென்றார் (வீணை) 1

காரைங்களித்தான் ஆஸனம் அளித்தான்
னியாயமதைக் கேளுமென்றார் (வீணை) 2

யெத்தனையோபேர்கள் பத்தினி இருக்கிறாள்
உத்தமி ஒருத்திதானோ உலகில் உத்தமி ஒருத்திதானோ (வீணை) 3

யிப்பவேனானோடி புஷ்பவனந்தேடி செப்புகிறேன்
யென்றெழுந்தார் சேதிசெப்புகிறேன் யென்றெழுந்தார் (வீணை) 4

------------

**5 வது கட்டம்**

நாரதர் அனுசூயை இடம்செல்வது

மத்தக்கலகம் விளைத்திடனாரதர் சென்றார் சென்றார் சென்றார்
உத்தமியாளிடம் பிக்ஷையளித்திடு மெத்தப்பசிக்கு சித்தமிறங்கயோ
யென்றார் யென்றார் யென்றார்.

(2) உத்தமி பிக்ஷையெடுத்து யெதிராக நின்றாள் நின்றாள் நின்றாள்.
நிர்வாண மதாயளித்தால் கொள்ளுகிறேனென்று கள்ளத்தனமாக
சொன்னார் சொன்னார் சொன்னார்.

(3) பர்த்தாவிடத்திலே உத்திரவு பெற்று வாறேன் வாறேன் வாறேன்
சித்தத்துக்கிசைந்தபடி உத்தமனே பிக்ஷ குத்தமில்லாமலே
தாறேன். தாறேன் நாறேன்.

--------

**6 வது கட்டம்**

ராகம்  காவடிச்சிந்து.

(1) நாதனேநம் டாஸ்ரமத்தில் வேதியசந்யாசி வந்து
பேதையே பசியெனக்கு யென்மாரே நான்
ஆதரவாய் கனிகள் கொண்டு நின்றேனே

2. சூதாகமொழியுரைத்து வாது செய்குறாரே யிந்த
வேதனைக்கு யென்ன செய்வேனதனே பசி
தீர்ப்பதெப்படி ஸர்வபோதனே.

3) பேதையே உன் கற்புக்கொரு பாதகமில்லாமல் அவர்

சாபத்துக்குள்ளாகாமலும் கார்த்திடாய் அந்த
அந்த வேதிய சந்யாசி பசி தீர்த்திடாய்.

(4) மாது கையில் ஜலம் கொண்டு ஸாது எதிராக நின்று
கன்னியாக வேணுமென்று தெளித்திட்டாள் அப்போ
பெண்ணுருவாகவே அங்கே ஜொலித்திட்டார்.

------------

**7 வது கட்டம்**

காலேஜி ஓடம்

அப்போது நாரதர் என்னவடி வானார்
பதினாறு வயதுள்ள பாலையாய்ப் போனார்,
பாடாந்தண்டை கொலுசு பாதசா மெட்டி,
பாங்கான இடை தன்னில் பட்டாடைகட்டி,
வஜ்ஜிரமிழைத்திட்ட ஒட்டியாணம்மின்ன,
வங்கியொடு பாட்டிலும் கைவளைகளென்ன,
வாகானமாலை பதைக்கங் துலங்க,
வஞ்சியுடகையில் ரவிக்கையிலங்க,
சீரான காதில் ரெத்தின கமமல் ஜிமிக்கி,
சித்திரைப்பதுமைபோல்நின்றார் குலுக்கி
சந்திரபிரபை சூரிய பிரபை பட்டமொடுசுட்டி,
பாங்கானராக்கொடி ஜடநாசங்கட்,
மல்லிகை முல்லையிருவாக்ஷிமலரோஜா
வாசனை கெந்தங்கள் பரிமளம்வீச,
யித்தனைத்திருவழகைக்கண்டார் ரிஷியும்,
ஏங்கியே மனக்கவலை கொண் டாரேயப்போ,
என் தாயே இந்த உருமாத்துவா இப்போதே,
எனைக் கண்டோர் நகைக்கச் சபித்தாயே மாதே.

--------

**8-வது கட்டம்**

ஸ்ரீராமச்சந்திரனே என்றமெட்டு.
நாரதர் சத்தியலோகம் செல்வது.

சத்தியலோகநாதனே சத்திவாணிபிராணேசனே
உத்தமிதந்த வடிவைப்பார் பார் பார். 1

அத்திரிமுனி பத்தினி மேல் மெத்தவும் குத்தமுறைத்தேன்
உத்தமிதந்த வடிவைத் தீர் தீர் தீர். 2

மெத்த அகத்தேவகித்து உத்தமியோடே பகைத்த
குத்தம் தனக்கென்ன செய்வேன் போ போ போ. 3

---------------

**9-வது கட்டம்**

கருவினுருவாகி என்றமெட்டு.
நாரதர் கைலைக்குச் செல்வது.

ஸம்போ கெங்காதானே சத்தியுமையாள் பாகனே
மங்கை தந்த வடிவதனை தீராயோ, 1

வாராயோ எந்தன் முன்னே பாராயோ நாரதர் நான்
தீராயோ என் னுருவை தேவா. 2

பாலமார்க்கண்டனுக்காய் காலனை விழவடித்த
ஆலகாலமுண்ட நீலகண்டா. 3

மண்டலத்தையளந்ததொரு கொண்டல்வண்ணன் வசித்திடும்
வைகுண்டந்தனைக்கே விரைவாய் போ ஓய்.

--------------

**10-வது கட்ட ம்.**

நாரதர் வைகுண்டம் ஏகுதல்.

முத்து நவமணி வஜ்ஜிரமிழைத்திட்ட ரத்னடோலந்தன்னிலே
லக்ஷமியோட நேசித்திருக்குமந்த உத்தமனைப்பணிந்தார். (1)

அன்ன நடயாளே மின்னலிடையாளே கன்னல்மொழியாளே
உன் முகம்பார்க்கவே என் மனம் நோக்குதே இங்கேயேதானிருப்பாய் 2)

தாசர்குறை தன்னை நாசம் செய்யும் ஜகதீசா உமைப்பணிந்தேன்
நேசமுடன் பரிகாசம் செய்யாமலே கேசவாகாருமையா.

------------

**11-வது கட்டம்**

மலடிவயற்றுமகன் போலே என்றமெட்டு
நாரதர் அனுசூயியிடம் செல்வது.

தெண்டகாரண்யம் சென்றாரே பதி தொண்டுசெய்யும்மாதைக்கண்டாரே
யான் கொண்டவுருவத்தை மாற்றாயே என்றார்.

சக்யலோகந்தனில் சென்றேனே வாணீசனையும் கண்ணால் கண்டேனே
பரிகாசமொழிகள் புகன்றானே என் சேய்வேனே.

கைலாசம் தனில் புகன்றேனே கௌரீசனையும் கண்டு பணிந்தேனே
என்னாலாகாதென்றானே என் செய்வேனே.

கேசவனைக்கண்டுபணிந்தேனே பரிகாசமுறைக்க உகந்தேனே
அன்னையே என் னுருமாற்றாயோ என் செய்வேனே .

கன்னி உருவத்தை விடுத்தாளே அவர்மின்னலைப்போல் ஓட்டமெடுத்தாரே.
இன்னம் கலகம் விளைத்தாரே அப்போதே.

-----------------

**12-வது கட்டம்.**

நாரதர் கலகம்.

திரிலோகசஞ்சாரி சீக்கிரமாய் ஓடிவந்து சத்திய
லோக வாணியிடம் தனித்து ஒருவார்த்தை சொல்வர்.

சரஸ்வதி பூஜையென்று உலகில் சாத்துவதும் பொய்யாச்சு.
அனுசூயை பூஜையென்று அனைவோரும் பேசிக்கொண்டார்.

அம்பா உமையவளே உங்கள் ஆலயத்தில் பூஜையில்லை
அத்திர்க்கும் அனு சூயைக்கும் ஆலயங்கள் கட்டுகிறார்.

பங்கயத்திலுதித்தவளே உந்தன் பாத்தாவிடத்தில் சொல்லு
மங்கையனுசூயாதேவி உங்களை பங்கம் செய்து விட்டாளே.

நாரதரும் சொல்லிவிட்டு நல்ல சண்டையிமுத்தோமென்று
வீணை தனைக்கானம் செய்து வானுலகில் சென்றாரே.

-----------

**13-வது கட்டம்**

குலுங்கிடவாருங்கன்ணா என்ற மெட்டு.
சரஸ்வதி பிர்மாவிடம் செல்வது.

கமலம் தனிலுதித்த கர்த்தனே யுமைப்பணிந்தேன்
உலகில் அனு சூயாதேவி உத்தமிக்க்க பூஜையென்னார்.

உம்முடைய சிருஷ்டியல்லால் உத்தமனே ஜனமம் உண்டோ
யானுரைக்கும் கல்வியல்லால் நாதனே பிழைப்பதுண்டோ

அத்திரிமுனிபத்தினியாள் ஆலயத்துக்கேத்தவளோ
பக்தியில் மிகுந்தவளோ உத்தமனே பார்த்து வாரும்.

(பார்வதி சொல்வது)

கெங்கையைச் சிரசில்வைத்த மங்கள குணாகானே
சங்கை தனை வேற்றுக்கும் சங்கர உமைப்பணிந்தேன்.

மாது அனுசூயாதேவி சாதுவிடத்தில்சென்று
சோதனை சய்து வாரும் நாதா உமைப்பணிந்தேன்

காமனைக்கண்ணாலெரித் தீர் கண்டத்தில்விஷம் தரித்தீர்
பாவையாள் பதிபூஜையில் பலனைக் குரைத்து வாரும்.

ஆலிலைமேல் பள்ளிகொண்ட அச்சுதா உடைப்பணிந்தோன்
பக்ஷமாய் யான் சொல்மொழியை யிச்சையுடன் கேளுமையா.

மாது அனுசூயாதேவி சாது இடத்தில் சென்று
சோதனை செய்து வரும் நாதாவுமைப்பணிந்தேன்.

------------

**14-வது கட்டம்**

காவடிச்சிந்து மெட்டு.

(திருமூர்த்திகளும் சந்நியாசிவேஷத்துடன் அனுசூயையிடம் செல்வது.

அரியும் அயனும சதுர்முகனுமப்போ நாடிறைவந்து கூடினார் கொண்டாடினர்)

தங்கள் பாரிவாள் சொன்ன பொறாமைமொழிக எண்ணினர் கேலிபண்ணினார்.
காஷாயம் ஜெபமாலை விபூதியுடனணிந்தாசேயப்போ துணிந்தாரே
போகநினைந்தாரே.

மூவரும் கூடியே கானகம்தேடியே சென்றாரே ஆசிரமம்கண்டாரே.
உத்தமியும் கண்டு மெத்தமகிழ்கொண்டு சித்ராசனமதை
அளித்திட்டாள் மனங்களித்திட்டாள் உபசரித்திட்டாள்.

அதிதியைப் பூஜித்து அன்பாகதேசித்து கொண்டாளே எதிர்நின்றாளே
குக்ஷிவாதையால உங்கள் ஆசிரமந்தனைத்தேடி வந்தோமே
பசியால்நொந்தோமே உம்மை உகந்தோமே.

இந்த வேளையிலெங்கள் பசிதனைத் தீர்த்திடாய் முன்னையே எங்கள் அன்னையே.
அந்தரங்கத்துடன் கந்தமூலம் கொண்டு அளித்தாளே உபசரித்தாளே நமஸ்கரித்தாளே

பதவி தமளித்தால் அருந்தோமென்று சொல்லி உரைத்தாரே கேட்டு பதைத்தாளே.
பாத்தா விடந்தனில் உத்திரவுபெற்று வாறேனே பிச்சை தாறேனே உங்கள் நேராக
மந்தகாசத்துடன் சிந்தை மகிழ்ந்து இருப்பீரே அன்ன மளிப்பேனே.
-----------

**15-வது கட்டம்**

(அனுசூயை அத்திரி மகாரிஷியிடம் சொல்வது)

நற்றவம் புரியும் எந்தன் நாதனே சரணம்.
உத்தமசந்யாசிகள் வந்து புகுந்தாராஸ்ரமம்.
பக்தியுடன் உபசரித்துப் பணிந்து நின்றேனே
பாங்காய்கனிகிழங்குகளும் பகுந்து தந்தேனே
முந்தியசந்யாசிபோலே மொழியுரைத்தாரே
இந்தவுரைக்கென்ன சொல்வேன் என் பிராணேசரே
பேதையே உன் கற்புக்கொரு பழுது வாராதே
சாதுக்களை ஆசிரமம் விட்டப்பால் விடாதே
மஹரிஷியின் வாக்கியப்படி மங்கையும் வந்து
சிசுவாகவேவேணு மென்று ஜலத்தைப்புரோக்ஷித்தாள்
சர்வாபரணம்குலுங்க பாலர்வடிவு கொண்டாரே
அத்தர் முனியும் அனுசூயையும் மகிழ்ந்து கண்டாரே
--------------

**16-வது கட்டம்**

தாராட்டு மெட்டு.
திரிமூர்த்திகளும் பாலரானது.

சிருஷ்டிக்கும் பிர்மாவோ ஜெகத்துக்கதிபதியோ
பர்த்தா செய்தவத்தால் பாலகராய்வந்தாரோ
ஆலிலைமேற்பள்ளிகொண்ட ஆதிமூலப்பொருளே
கோலாகலத்துடன் குழந்தையாய் வந்தாரோ
திரிபுரமெரித்தவரோ சிவனாமருத்திரரோ

மகரிஷிதவப்பயனால் மதளை பாய்வந்தாரோ

-------------

**17-வது கட்டம்**

காவடிச்சிந்து. (சந்தவரை)

நாரதரும் வாணியிடம் வந்தார் முகம் வாடியிருக்க காரணம் ஏதென்றார்.
மாது அனுசூயையிடம் வேதன் சிசுபாலனானார் என்றார் அங்கு சென்றார்

அம்பா உமையவளேலாறாய் உந்தன் சங்கரனார் சேதிதனைக்கேளாய்
உத்தமி அனுசூயைக்கி பெத்த பிள்ளை போலிருக்கார் வாராய் சென்று பாராய்.

பங்கயத்திலுதித் திட்டமாது பர்த்தா உன் மேல் பக்ஷமினியேது
அத்திரிமுனி பத்தினியாள் புத்திரனாய் ஆக்கிவிட்டாள் கோதே செல்லிப்போதே

--------------

**18-வது கட்டம்**

லக்ஷிமி பார்வதி சரஸ்வதிமுவரும் பர்தாவைத்தேடிச்செல்வது.

மூவரும் கூடியே கானகம்நாடியே நாதனைக்காணாமல் தேடவே
பிராணநாதனைக்காணாமல் தேடவே.
கானகத்திலுள்ள மானுடன் பக்ஷிகள் பாதம் பணிந்து கொண்டாடவே
அந்தரத்திலுள்ள தேவர்கள் கூடியே ஆனந்தமாய் மலர்போடவே
அந்தவனத்தில் வசித்திடும் தேவதை குறத்திபோல் குறம்பாடவே.
ஆரடி இந்தவனக்குறத்தி நீ அன்புடன் கையைப்பார்ப்பாயோ
உத்தேசித்த காரியங்களை உறுதியாக உரைப்பாயோ.

----------------

**19-வது கட்டம்**

குறிசொல்வது.

கானகத்து மலைக்குறத்தி கையின் குறி உரைப்போம் அம்மைகையின்
குறியுரைப்போம்.

வானுலகதேவருக்கும் வணங்கிகுறியுரைப்போம் அம்மை

தாயே உன் மலர்க்கரத்தை தாறாய் குறிசொல்வேன்
மங்களமாய்க்குறியுறைப்பேன் மகிழ்ந்து கேளாயம்மை
தாயே உன் கரந்தனிலே தனரேகையிருக்கு
நீ தனித்துச்சென்ற யிடங்களெல்லாம் கனகமயமாகும்
பர்த்தாவைத்தேடுகிற பாவனையுமிருக்கு
பாலராகி ஓரிடத்தில் லீலை செய்கிறாரம்மை
தேடியதோர்பொருளுமக்கு கட்டுறது அம்மை
கூடிய சீக்கிரந்தன்னிலே திருமணமும் நடக்கும்
உந்தனுடகரந்தன்னை காட்டாயோ அம்மை
உகந்து குறிநானுரைப் பேன் மகிழ்ந்து கேளாயம்மை
பராசக்திவடிவமுள்ள பாக்கியரேகையிருக்கு
பர்த்தாவைத்தேடுகிற பாவனையுமிருக்கு
தேடியதோர்பொருளுனக்கு சித்தியாகுமம்மை
சீக்கிரத்தில் சுபமாக திருமணமும் நடக்கும்
தாயே உன் காந்தன்னை தாராய் குறிசொல்வேன
சீரானகுறி உமக்கு சீக்கிறமாய்ச் சொல்வேன
ஏராளமாய் வித்தைரேகை யிருக்குதம்மாகரத்தில்
தாராளமாய் அனை பேருக்கும் தந்திருப்பாய் அம்மை
பர்த்தாவும் ஓரிடத்தில் பாலனானார் அம்மை
திருமணமும் செய்து கொண்டு சீக்கிரம் வருவீர்கள்

**20-வது கட்டம்.**

கும்மி.
முவரும் ஆசிரமம்சேருதல்

மூவரும்கானகம் சென்றாறாம் முனி ஆசிரமம் தன்னில் போய்நின்றாறாம்
மூவரும்பாலரைக்கண்டாராம் மடிமீதினில் வைத்தானந்தங் கொண்டாராம்.

அன்னையைக்கண்டுபணித் தாமம் அவ ராசீர்வதிக்க உகந்தாராம்.
சின்னஞ்சிசுக்களை யின்னாரென்று தெரிவிப்பாயென்று பணிந்தாறாம்

கன்னியே எந்தன் குதந்தைகள் தானிதைக்கண்ணாலே பார்த்து மகிழ்ந்திடுங்கள்.
வேற்றுமுகம் பார்த்து கத்தும் குழந்தைகளை விட்டுவிடுங்கள் தொட்டிலிலே.

மங்கையர் தன்னை உபசரித்தாள் வர்னப்பட்டு பூஷணமளித்தார்
கெங்கை ஆடியே அவாள் தரித்தாள் டங்கையர் தன்னையும் சோஸ்தரித்தாள்

கந்தமூலபலாதியளித்தான் மங்கையர்களுமதைக்கிரகத்தார்.
பாங்கிலிய பிசைக்ஷ தரவேணுமென்று மாதரசிதன்னை ஸ்தோத்தரித்தாள்

சிருஷ்டி செய்யும் ஜெக்கர்த்தாவம்மா உலகைரெகிக்கும் எந்தனுட பர்த்தா அம்மா .
சம்ஹாரம் செய்திடும் ருத்திரயம்மா யிவர் மூவரும் எங்களுட பர்த்தாவம்மா.
-------------

**21-வது கட்டம்**

பள்ளியரைக் கீர்த்தனை மெட்டு

பல்லவி.
பாத்தாவையளித்திடாயம்மா யித்தரையிலுந்தனை போல்
உத்தமிநான் பார்த்ததில்லை பர்த்தாவையளித்திடாயம்மா

அனுபல்லவி.
முத்திநார் தரிஷிக்கித் தந்த உருவைமாற்றாமலிருந்ததினாலே
அவரால் வந்த திந்தகாரணங்கள்

எங்கள் மேல் பமனதைவைத்து தங்கியே மனம் பூரித்து
பாத்தாவத்திரவு பெற்று பாங்காக ஆசீர்வதித்து பர்த்தாவை
தந்திடுலேனிந்தவேளை மந்தன் சிறுமைந்தர்களை
நீங்கள் வந்ததினால் திருமணம் விந்தையாய் நடத்தவேணும்
முந்திப்போல் திரிமூர்த்திகள் சொந்தவடிவையும் கொண்டார்
பந்தல்படி கள்ஜோடித்து ஆனந்தமாகவிவாகம் செய்தார்.
முப்பத்து முக்கோடி தேவர் பக்தியுடன் வந்து நிற்க
நாற்பத்தெண்ணாயியம் ரீஷிகளாசீர்வதிக்க
மைந்தன் திரிமூர்த்தகளுக்கும் விந்தையுடனலங்கரிக்க
மங்கல்ய தாரணம் செய்து மங்கையு மனமகிழ்ந்தார்.
----------

**22-வது கட்டம்**

உத்தமகிருஷ்ணனே என்றமெட்டு நாரதர் கலகம்

சுருக்குடன் நாரதர் உருக்குக்கடலைக்கொண்டு
தேவரிருக்கும் சபைக்குவந்தார்.
திருமூர்த்திகளும் உபசரிக்க அங்கீகரித்து
பொராஆமையால் ஓர்மொழியுரைத்தார்.

சுருக்குடனேயிந்த உருக்குக்கடலை தன்னை விரைவாய்பக்குவம்
செய்து உருவாய் என்றுரைத்தார். (சுருக்குடன் )

மூவரும் வாங்கி மனையாளிடம் கொடுக்க
முடியாதென்றுரைத்தார் ரிஷியவர்வாங்கி
அனுசூயையிடம் கொடுக்க நொடியில் பக்குவம்
செய்து அனை பேருக்குமளித்தாள் (சுருக்குடன்)

வெட்கித் தலைகுனிந்து நாரதர்மஹாரிஷி
விரைவாக எழுந்து சென்றார் அப்போது
ரிஷிகளும் அனுசூயைப்புகழ்ந்து ஆசிர்வசனங்கூறி
அனைபேர்களுமகிழந்தார். (சுருக்குடன்)

-------------

**23-வது கட்டம்.**

மங்களங்கள் பாடினார்கள் சிங்காரமாக ஜெயமங்களங்கள்,
மாது பத்மாசனியாட்கும் ஸ்ரீதரன் ஜெகநாதருக்கும் மங்களங்கள்.
சங்கரர்உமையவட்கும் இங்கிதமாக பங்கயத்திலுதித்தோர்க்கும்
பாரிவாணி நாயகிக்கும் மங்களங்கள்.

தங்கக்கமலமெடுத்தாள் தாய் அனுசூயை மங்கள ஹாராத்திக்கொண்டு
மகிழ்ந்து திருஷ்டிசுத்திநின்றாள் மங்களங்கள்.

**முற்றுப்பெற்றது.**

------------------

# கோராக்கும்பார் சரித்திரம்.

**1-வது கட்டம்**

வந்தனம் தந்தேன் என்றமெட்டு

சத்திய புரிதன்னில் நிஜபக் தன் வசித்திட்டான்
கர்த்தன் பாண்டுரெங்கன் மீதில் பக்திமிகுந்த சித்தனாம்
உத்தமமாம் குயவத்ரெழிலை நித்தியம் நடத்தும் பக்தனாம் (சத்திய)

பாரோர்புகழ் ஹரி நாமத்தை பஜனை செய்துகளித்தவன்
கோரகும்பரென்னும் நாமம்கூவியழைக்க தரித்தனன் (சத்திய)

காமக்குரோதலோபமோகம் கண்டித்த பரிசுத்னம்
நேமமாக ஹரியை நெஞ்சில் நிலைநிறுத்தும் முக்தனாம் (சத்திய)

பத்தினிபுதல்வனோடு விரக்தியாய்ப்பிழைத்தினன்
சித்தத்தில்ப்பரப்பிர்மஹத்தை நிறுத்தி மண்குழைத்னன் (சத்திய)

------------

**2-வது கட்ட ம்.**

ஸ்ரீஹரியைச் சிந்தைதனில் நாடியவர் திவ்யகுணயனுபவத்தை பாடி
சேத்து மண்ணை சேருசெய்ய பூர்தியாக எண்ணங்கொண்டு மிதித்தார் அதில்குதித்தார்

மாது ஜலத்துக்கேகும்போது சிறுபாலனைப்பார்த்துக்கொமென்றாள்சாது.
வந்த சிசுவைப்பாறாமல் சிந்தையில் ஒன்றும் தோணாமல் மதித்தார் சேர்த்து
துகைத்தார்.

மங்கையவள் சீக்கிரமாய்வந்தாள் சிறுபாலனைக்காணோமென்றுநொந்தாள்
மண்ணுடனே சேர்ந்து பாலன் விண்ணுலகடந்ததைக்கண்டாள. சோகம் கொண்டாள்.

தீபரசப்தமாய்மொழியுரைத்தாள் கடுங்கோபத்தால் பக்தாவையும் பழித்தாள்.
பத்தினிகுரலைக்கேட்டு உத்தமத்யாத்தைவிட்டு இறைந்தார்சொல்லிக் குறைந்தார்

பாலன் போனால் கிடைத்திடுமாதே கோபாலன் சென்றால் வருவாரோ இப்போதே
பாலனுக்காயெந்தனுடசீலத்தை யொழித்தாயடிகள்ளி என்று சொல்லி

------------

**3-வது கட்டம்.**

(சேடி நீ மதுரைக்கு)

பக்தாயுரைக்லுமே உத்தமிகோபமாய்
  பெத்த தாய்க்கிர ஹதிற்கு சென்றனள்வேகமாய்
மைந்தனைப்பிரிந்த விருத்தாந்தத்தையுரைத்தாள்
  தந்தை தாயிருபேரும் நொந்து கோபித்தார்
பாலனுக்காகுணசீலனை வெறுப்பாளோ
  சீதானும் நீ செய்த கோபத்தைப் பொருப்பாறோ
மருமகனை மரியாதையாயழைத்து சிறுபெண்
  கன்னியைத் திருமணஞ் செய்து வைத்தார்.
பத்தினி இருபேரும் உத்தமியுடனே
சத்திய புர்தனக்கு ஏகினார்பாங்காய்

-----

**4-து கட்ட ம்**

அந்தரங்கமாய் சிந்தையுருகிக் கோவிந்தநாமத்தைப்பாடினார்
ஞாலம் தன்னை அக்ஞானமானதை கானலெனறவர் எண்ணினார்
பாலன் சங்கீதலோலன் வேணுகோபாலனைத்துதிபண்ணினார்
நாரணாபர்பூரணா ஜெகத்காரணாவென்று பாடினார்
ஆறணம் உதைகேட்கவந்த ஸ்ரீநாதனைக்கொண்டாடினார்.

கன்னியிருபேரும் மன்னன் கரந்தன்னை தன் மடியில்வைத்து யேந்தி
கண்ணை விழித்து இது அன்யாயமென்று தன் கரங்களை சேதித்
பன்னகமீதில் நன்ன சயனித்த பங்கஜாக்ஷனை சேவித்தார்
கன்னியிருவர்கள் தன் மனதையும் கண்ணன் பாதத்தில் ஸ்தாபித்து
பாவையருடன் பக்திசெய்து நேமமாக்காலம் கழித்திட்டார்
கரத்தையாகவே தசமிவிரதத்தினில் பண்டரீநாதன் அழைத்திட்டு.

---------

**5-வது கட்டம்**

மாலலங்கார என்றமெட்டு

கோபுரசேவையைக் கண்டாரும் கோரக்கும் பாறானந்தங்கொற்றாம்,
மஹாபத்தியாலிரு மங்கையருடன் கூட மகிழ்ந்து புகழ்ந்து அய்ய.
மகிமையைக்கொண்டாடி கோபுர.

அத்திபாலரசு அருநெல்லி புன்னை அபரிமிதமான பலவிருக்ஷகள்,
சுத்தி எங்கிலும் மயில்தோகை விரித்தாடும், முக்தியளித்திடும்
பெ னமயமான, கோபுர

அண்டர்கள் முனிவர்கள் கண்டறியாத பண்டரீகோபுரசிகரமதில்
கொண்டல்வண்ணன் பதம் பூண்டவறாய் நிஜதொண்டர்கள் கோஷ்டிகை
கண்டாரந்தத்தினல், கோபுரசேவை

பரவசமாய் சன்னதிக்கெதிர்நின்று பாவையருடன் சன்ன தங்க டார்,
காரமில்லாதகைங்கர்யம் குறைந்ததென்று கண்ணினால் நீருத கலங்கத்தவித்தார்

தொண்டர்கள் நிர்த்தனம் செய்வதைப்பார்த்து பண்டரினதனட
அண்டவொண்ணாத ஆனந்தங்கொண்டு அவர்கள் நடுவினில் சென் தடித்தார்.
(கோபுர)

பஜரேபண்டரிநாதாவென்று பஜனை செய்துல் துதித்தார் ஜெய
நாம்தேவ் சோபாம்தேவ் துக்காராம்சக்குபாய் நிர்த்தனம்கண்டார்

-----------

**6-வது கட்டம்**

காவடிச்சிந்து பாளைவாய்

தம்புறு வீணை மிருதங்கம்யிங்கித ஜாலர்கள் போட்டு
ஸங்கீதத்துடனே நின்று பாடினார்
மங்களகரமாக கூடினார்.

பக்தர்கள் ஒன்றாகக்கூடி சித்தமுருகியே பாடி
அத்தனை பேருமாயங்கே கூடினார்
முத்தியே விரும்பி ஸதாபாடினார்

பக்தபரா தீனர்நின்று சித்தமகிழ்ந்து குதிக்க
இத்தனை பேரு மாய் நின்று துத்திட்டார்
பக்தனுக்கிரகாமுமளித் திட்டார்.

கரமிரண்டிலும் ஜாலர்கள் விரைவாக எடுத்துக்கொண்டு
கண்ணன் பாதத்தில் மனதைச்சாத்தினார்
தாசர்கள் மலர்மாரி தூற்றினார்.

-------------

**7-வது கட்டம்**

துலக்கி வரும் கடலுக்கு யென் றமெட்டு.

அன்னைருக்மணியெழுந்து உன்னிதமாய் வாறாள்
சொர்னமணி பூஷணங்கள் நன்ராகவேயணிந்து கொண்டு
வர்னப்பட்டாடை தரித்து மின்னலைப்போலே
பக்தர்கண்ணின் முன்பாகவே சிறுகன்னியைப்போலே

சங்கமிருதங்கம் நெருங்க மங்களவாத்தியங்கள் முழங்க
மைந்தனை மருங்கில்வைத்து வந்ததைப்பரராய்
அந்த சுந்தரிகேரய் இந்த விந்தையைப்பாரய் அன்னைருக்மணி

பக்தனுட பாலனடி சத்யகுணசீலனடி
மெத்த உய்யானடி பாவையே வாரய் இந்த பாலனைப்பாராய்.
உந்தன் பாவத்தை தீராய் அன்னைருக்மணி

மாகைருக்மணியைக்கண்டு மனமகிழ்ந்து பரவசமாய் மலரடி பணிந்தாள்
சிறுமதளையையணைந்தாள் அன்னைருக்மணி

மங்களங்கள் பாடினாறம்மன் மகிமையைக் கொண்டாடினர்

**முற்றிற்று**

-----------------